2009 ஜூலை 2]

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையிலே அவற்றை நான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

80—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***42338—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காரப்பட்டு, கல்லாவி மற்றும் சிங்காரப்பேட்டையில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கல்லாவி, சிங்காரப்பேட்டை ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க மையங்களில் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள் நிறுவக்கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், காரப்பட்டு கிராமத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க தற்போதைக்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில், காரப்பட்டு மையத்தைச் சுற்றியிருக்கக்கூடிய காரப்பட்டு, கீழ்மத்தூர், கே. பாப்பாரப்பட்டி, இராமகிருஷ்ணபதி, கதவணி,

கருமாண்டபதி, உப்பாரப்பட்டி ஆகிய ஏழு பஞ்சாயத்துகளில் 35-க்கு மேற்பட்ட சிறிய கிராமங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய ஆயிரம் விவசாயிகள், அதாவது பால் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள், உற்பத்தியாளர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே, ஊத்தங்கரையைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதியிலே, பல்வேறு தனியார் நிறுவனங்கள், ஹெரிட்டேஜ் கம்பெனி, அக்செண்ட் கம்பெனி, ஆரோக்கியா கம்பெனியெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு நமது ஆவின், அரசினுடைய பால் துறையை நசுக்குகின்ற வேலையைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு, காரப்பட்டு பகுதிக்கு, பால் குளிரூட்டும் மையத்தை அமைப்பதன்மூலமாக நமது விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்; அரசுக்கு இலாபத்தையும் ஈட்ட முடியும் என்பதால், இந்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால் குளிரூட்டும் மையத்தை அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரையில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் 16,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுவதால், 18-6-2008 முதல் 5,000 லிட்டர் கொள்ளளவு உள்ள பால் குளிர்விப்பான் செயல்பட்டு வருகிறது. அதேபோல, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் போதிய இட வசதி இல்லாததால்—சிங்காரப்பேட்டையில் வசதி இல்லாத்தால்—தாதம்பட்டியில் தற்போது ஒரு குளிர்விப்பான் அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்லாவி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில், தற்போது பால் உற்பத்தி நாளொன்றுக்கு 45 லிட்டர் மட்டுமே இருக்கிற காரணத்தால், கல்லாவி பால் தடத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பெறப்படும் 3,900 லிட்டர் பால்—கிருஷ்ணகிரியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் இருப்பதால்—நேரடியாகவே கிருஷ்ணகிரியில் மத்தியப் பால் பண்ணையில் பெறப்பட்டு பதப்படுத்தப்படுவதால், கல்லாவி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பில்லை.

2009 ஜூலை 2]

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற காரப்பட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், கடந்த 10 ஆண்டுக் காலமாகச் செயலிழந்த நிலையில் இருப்பதால், அதைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தப் பகுதியில், சுமார் 3 ஆயிரம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்யப்படுமேயானால் —கொள்முதல் செய்யப்படுகிற பட்சத்தில்—அங்கு தனியாக ஒரு பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தாலுகாவிலே இருக்கக்கூடிய பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, இதுவரை பால் குளிரூட்டும் நிலையம் என்பது முறையான அளவிற்குச் செயல்படாமல் உள்ளது. சிங்காரப்பேட்டை என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதி, திருவண்ணாமலைக்கும் திருப்பத்தூருக்கும் இடையிலே இருக்கக்கூடிய ஒரு பகுதி. வெள்ளக்குட்டு, நாயக்கனூர், அத்திப்பாடி போன்ற 10 பஞ்சாயத்துக்களில், ஏறக்குறைய 1,200 பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பகுதியிலே பால் குளிரூட்டும் நிலையத்தை அமைப்பதன்மூலமாக, உடனுக்குடன் பாலைக் கொள்முதல் செய்வது அல்லது பணப் பட்டுவாடா செய்வது போன்ற இப்படிப்பட்ட பணிகள் தொடங்கும். மேலும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் 10, 15 கி.மீ. தொலைவிற்கு அலைகழிக்கப்படக்கூடிய நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். அந்த அடிப்படையிலே, சிங்காரப்பேட்டையிலே பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், பால் குளிரூட்டும் மையங்கள் இல்லாத தாலுகாக்களில், தமிழகம் முழுவதும் அனைத்துத் தாலுகா மையங்களிலும் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மையங்கள் என்று கணக்கில் எடுக்க முடியாது. எந்தப் பகுதியில் அதிகமாகப் பால் உற்பத்தி இருக்கிறதோ, அங்கே பால் கெட்டுவிடாமல் இருப்பதற்காகக் குளிர்விப்பான்களை நாம் பயன்படுத்துகிறோம். ஆகையால், எந்தத் தாலுகா, எந்தப் பகுதி, எந்த ஒன்றியங்களாக இருந்தாலும்கூட, பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில், 2,000 லிட்டருக்கு மேல் 5,000 லிட்டர் வரை இருக்குமேயானால், தனியாக ஒரு பால் குளிர்விப்பான் அமைப்பதில் எந்தவிதமான தடங்கலுமில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அதியமான்.

திருமதி லதா அதியமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியில், கள்ளிக்குடி ஒன்றியம் அதிக கிராமங்கள் நிறைந்த பகுதி. அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தந்தால், மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியத்தில், அதற்கு அருகில் உள்ள ஏறையூரில் தற்போது சுமார் 3,000 லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிர்விப்பான் செயல்பட்டு வருகிறது. திருமங்கலத்தில் நிச்சயமாக அமைப்பதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதியில், ஒரு குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]